**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**O.S. No. 249/2014**

**Witness PW 1**

பெயர் தனலட்சுமி க/பெ மூர்த்தி

இன்று (22.08.2024) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**6 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

முத்துசாமி எனது தாத்தா என்றால் சரிதான். முத்துசாமிக்கு 3 பிள்ளைகள் உள்ளார் என்றால்ச ரிதான். அவர்கள் பெயர் அங்கப்பன், நாராயணன் தனபால் என்றால் சரிதான். அங்கப்பன் என்பவருக்கு தம்பிதுரை, ராதாகிருஷ்ணன், பாக்கியவதி ஆகியோர்கள் குழந்தைகள் என்றால் சரிதான். பாக்கியவதி என்பவரின் மகன்கள் தான் இவ்வழக்கில் கண்ட 6 முதல் 9 பிரதிவாதிகள் என்றால் சரிதான். அங்கப்பன் என்பவர் 01.011.1991 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தகப்பனார் நாராயணன் என்றால் சரிதான். நாராயணன் என்பவருக்கு பாலம்மாள், தனலட்சுமி மற்றும் தயாநிதி ஆகியோர்கள் வாரிசுகளா என்றால் இல்லை தனலட்சுமி ஆகிய நானும், 1 வாதி பாலம்மாள் எனது தாயார் ஆகியோர்கள் மட்டுமே வாரிசு. தயாநிதி என்பவர் எனது சித்தப்பா தனபால் என்பவரின் மகன். எனது தகப்பனார் எப்போது இறந்துபோனார் என்றால் 2014 ல் இறந்துபோனார் தேதி மாதம் ஞாபகம் இல்லை. நாங்கள் அனைவரும் இந்து கூட்டு குடும்பமாக தான் வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான். பூர்வீக சொத்தின் மூலம் வந்த வருவாய் வைத்து பொது கூட்டு குடும்பத்திற்கு சொத்துக்கள் வாங்கப்பட்டது என்றால் ச ரிதான். அசல் வழக்கு தாக்கல்

செய்தபோது அங்கப்பன் வாரிசுகளாக தம்பிதுரை, ராதாகிருஷ்ணன் என்பவர்களை மட்டுமே சேர்த்திருந்தேன் என்றால் சரிதான் அங்கப்பனின் மகளான இறந்து போன பாக்கியவதி என்பவரின் வாரிசுகள் மகாதேவன், மகாதேவி, மகாலட்சுமி மற்றும் மலர்கொடி ஆகியோர்கள் அவர்களாக மனு செய்து அதன் பிறகு வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தில் 6 முதல் 9 பிரதிவாதிகளுக்கும் கூட்டு குடும்ப உறுப்பினர்கள் என்ற முறையில் பாகம் உரிமை உள்ளது என்றால்ச ரிதான்.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledge by him/her to be correct.

(Sd/- A. Tamilselvan)
I Additional Subordinate Judge,
Villupuram